செ.வெ.எண்: 06/2021 நாள்: 03.12.2021

# பத்திரிக்கை செய்தி

சாலைகளில் மோட்டார் வாகன விபத்து நிகழும் பொழுது ஒரு நபர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் உயிரை காப்பாற்றிய **"இடர்பாடுகளில் இருப்பவர்களுக்கு உதவி செய்பவர்" "Good Samaritan Award"** வழங்குவது தொடர்பான திட்டம் இந்திய அரசின் சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது 15.10.2021 தொடங்கப்பட்டு 31.03.2026 வரை செயல்பாட்டில் இருக்கும்.

இந்திய அரசின் சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்தால் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, சாலையில் மோட்டார் வாகன விபத்து நிகழும் போது, விபத்தில் காயமடைந்த நபரை விபத்து நிகழ்ந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்க வழிவகை செய்து விபத்தில் பாதிக்கப்பட்ட ஒரு நபர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் உயிரை காப்பாற்றிய **"இடர்பாடுகளில் இருப்பவர்களுக்கு உதவி செய்பவர்"** (**Good Samaritan**) தொடர்பான விவரங்கள் காவல்துறை மற்றும் விபத்திற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டு அதன் முன்மொழிவுகள் மாவட்ட அளவிலான மதிப்பீட்டுக் குழுவால் அங்கீரிக்கப்பட்டு போக்குவரத்து ஆணையருக்கு அனுப்பப்படும். போக்குவரத்து ஆணையரால் மேற்படி நபருக்கு ரூ.5000/- மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட **"இடர்பாடுகளில் இருப்பவர்களுக்கு உதவி செய்பவர்"** (**Good Samaritan**) ஒரு வருடத்திற்கு ஐந்து முறை விருது பெற தகுதியானவர்.

மேலும், மாநில அளவிலான கண்காணிப்பு குழுவினரால் வருடந்தோறும் மூன்று நபர்களின் **"இடர்பாடுகளில் இருப்பவர்களுக்கு உதவி செய்பவர்"** (Good Samaritans)-ன் முன்மொழிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய அளவிலான விருதுக்கு பரிந்துரைக்கப்படும். இந்திய சாலை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்தில் உள்ள மதிப்பீட்டுக் குழுவினரால் அனைத்து மாநிலங்களிலிருந்து பெறப்படும் முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டு வருடந்தோறும் பத்து நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்படும் 10 நபர்களுக்கு தலா ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) வீதம் சான்றிதழ் மற்றும் கோப்பை ஆகியவற்றுடன் வருடந்தோரும் புதுதில்லியில் நடைபெறும் தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தின் போது விருது வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**